உ

சிவமயம்.

கணபதிதுணை.

நெஞ்சறிவுறுத்தல்.

இஃது

ஸ்ரீசுயம்பிரகாசசுவாமிகள் பரம்பரையில்

திருவையாற்றிலெழுந்தருளிய

சிவாநந்தசுவாமிகள் மாணாக்கருளொருவராகிய

தஞ்சைமாநகரம்

கரந்தையம்பதியிலிருக்கும்

ந. வீரபத்திரபிள்ளையவர்களால்

இயற்றப்பட்டு,

மேற்படி சிவாநந்தசுவாமிகள் மாணாக்கருளொருவராகிய

கருவூரைச்சார்ந்த நல்லமாகாளிப்பட்டி

சு. தெய்வசிகாமணிக்குருக்களவர்களால்

தஞ்சைமாநகரம், சதாவதானம்

சுப்பிரமணிய ஐயரவர்களது

சென்னபட்டணம்

வித்தியாவர்த்தனி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

வெகுதானிய௵ மார்கழி௴

சிவமயம்.

சாற்றுக்கவிகள்.

தஞ்சைமாநகரம், சதாவதானம்

சுப்பிரமணியஐயரவர்கள்

இயற்றிய

அறுசீர்விருத்தம்.

அணிபூத்த திருவையாற் றமர்ந்தருளு மெம்பெருமா
 ணடியைப்பேணிக்
கணிபூத்த மலந்தபுக்க நெஞ்சறிவு றுத்தலென்றோர்
 கருவிதந்தான்
மணிபூத்த வளைக்குலங்கள் வானகத்தி லுடுச்சூழ
 மதியூர்ந்தாங்குப்
பணிபூத்த தடத்துலவுந் தஞ்சையில்வாழ் வீரபத்ரப்
 பாவலோனே.

மாயூரம்

விசுவபிர்ம்மவம்ச உபாத்தியாயராகிய

சந்திரசேகர உபாத்தியாயரென்று வழங்குகின்ற

முத்துக்குமாரதாசரவர்களியற்றிய

நேரிசைவெண்பா.

பெருகிப் பெரும்புவியிற் பேதைமைசான் மாந்த
ரருகிக் கிடந்தவுள மாஞ்செய்—மருவிப்பேர்
விஞ்சையென்கூ ழோம்பியதால் வீரபத்ர நாவலன்சொ
னெஞ்சறிவு றுத்தலெனு நீர்.

கருவூரைச்சார்ந்த - நல்லமாகாளிப்பட்டி

சச்சிதாநந்தசுவாமிகள் ஆதீனம்

தெய்வசிகாமணிக்குருக்களவர்கள்

இயற்றிய

கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

திருவளரகண்டபரி பூரணசதாநந்த
சிற்பரம்பொருளுண்மையைச்
செங்கையாமலகமென வெம்மனோருங்கண்டு
தேர்வுறற்குறுதிநெறியாய்
உருவளருவேதவேதாந்தத்தினுட்பொருளி
னுண்மையோர்ந்தம்புவிக்கண்
ஓதுறுங்கவிநூறமைத்துநன்னெஞ்சறி
வுறுத்தனூலொன்றிசைத்தான்
அருள்வளருமந்தணர் கணம்பரவுமையாற்
றரும்பதியகத்தமர்ந்த
அற்புதமிகுஞ்சிவாநந்ததேசிகனடி
யகத்தவிசிருத்துமன்பன்
விருதுபெறுகவிவாணர் புகழ்செயுந்தஞ்சைநகர்
மேவுங்கரந்தைபுரிவாழ்
மெய்த்தவசிரோட்டர்புகழுத்தமகுணங்கணிறை
வீரபத்திரமகிபனே.

கும்பகோணம்

ஸ்ரீ. மு. மூக்கனாசாரியாரென்று வழங்குகின்ற

சிவாநந்த தாசரவர்கள்

இயற்றிய

அறுசீரடிவிருத்தம்.

சீர்பூத்தவருமறைவாழ்த் தொலிபரவுமையாற்றிற்
றிகழும்பெம்மான்
நீர்பூத்தமலரடிக்கோ ரணியெனநெஞ்சறிவுறுத்த
ணிகழ்த்தினுற்
பேர்பூத்தநெடுஞாலத் தெம்மனோர்க்கோர்துணையாய்ப்
பிறங்கும்வாய்மை
எர்பூத்தசீலனுயர் வீரபத்திரனெனும்பே
ரியைந்துளோனே.

உ

சிவமயம்.

நெஞ்சறிவுறுத்தல்.

காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நித்தமுமடியார்போற்று நியமயோங்கையாற்றீசன்
வித்தகசித்தாநந்த மெய்யருளதனையெய்தற்
கொத்தநெஞ்சதனுக்குண்மை யுணர்த்துநூனாறும்பாட
அத்திமாமுகத்தோன்பொன்னாரடியிணைமுடிமேற்கொள்வாம்.

குருவணக்கம்.

எமதுயிர்க்குயிராயெங்கு மேகமாய்நிறைந்தேயென்றன்
மும்மலவாதனையையிங்கோர் மொழியினான்மாற்றிமேலாம்
அமலவாழ்வளித்தாட்கொண்ட வருட்சிவாநந்தநாதன்
கமலமாமலர்த்தாளென்றுங் கருத்தினுஞ்சிரத்தும்வைப்பாம்.

நூல்.

உலகெலாம்படைத்துக்காத்திட் டொடுக்குமுச்செயற்குஞ்சான்
திலகநான்மறைநூலாறுஞ் செப்பருங்கருணைத்தேசாய் [ருய்த்
அலகிலாச்சித்திமுத்தி யடியருக்கருள்வதாகி
இலகிடுமையாற்றீச னெழிற்பதம்பணிவாய்நெஞ்சே. க

மாதர்பொன்பூமிமீதாம் வாஞ்சையிலழுந்தியென்றுந்
தீதறுமையாற்றீசன் றிருவடிமறந்தாயாகிற்
கோர்துறும்பாசஞ்சூலங் கொண்டுவெஞ்சினத்தோடேம
தூதர்வந்தழைக்கும்போதென் சொல்குவாய்பேதைநெஞ்சே.

பஞ்சவிந்தியங்களேகும் பாதையேநீயுஞ்சென்றாற்
கிஞ்சிலுங்கனவிலேனுங் கிடைத்திடலரிதாமின்பம்
விஞ்சுசீரையாற்றீசன் மெய்யருட்சரணந்தன்னைத்
தஞ்சமென்றடைந்துநின்றாற் சந்ததஞ்சுகமாநெஞ்சே. ௩

தன்னையீன்றெடுத்தவன்னை தந்தையர்துணையாய்வாரார்
பொன்னிலந்துணையாய்வாரா பூவையர்துணையாய்வாரார்
உன்னுடறுணையாய்வாரா துறவினர்துணையாய்வாரார்
பன்னருமையாற்றீசன் பதத்துணை துணையாநெஞ்சே. ௪

சத்தியவகண்டாநந்த சகளநிட்களங்கமோன
சுத்தநிர்க்குணவியோம துரியதற்பரமாயோங்கும்
அத்தனையாற்றீசன்றாட் கன்புறுதனுத்தமான
இத்தலத்துழன்றுழன்றே யென்பலன்கண்டாய்நெஞ்சே. ௫

மண்ணுலகிடந்தவேன மாலவன்பதமும்பொன்றும்
விண்ணுலவன்னமான வேதன்வாழ்பதமும்பொன்றும்
நண்ணுசீரையாற்றீச னற்பதம்பொன்றாதென் [சே.
றெண்ணியன்னவன்றாள்போற்றி யேதமற்றிருப்பாய் நெஞ்

நன்றிதுவிதுதீதென்றே நாடெலாநொடியிற்சுற்றா
தோன்றினும்விழைவற்றென்று மோர்நிலைமருவிநின்றே
பொன்றுறுங்கனவிற்கண்டபொரு[illegible]வனைத்துங்கண்டால்
அன்றுனக்கையாற்றீச னருளமுதூட்டுநெஞ்சே.

தங்குமாமாயைதன்னாற் சார்தரும்பவங்களின்னும்
இங்குறாதகற்றிமாறா வின்படைந்துய்யவேண்டிற்
பங்குறவங்கிங்கென்றே பார்த்திடாதொருமைநோக்காய்
எங்குநல்லையாற்றீச னெழினடங்காண்பாய்நெஞ்சே. ௮

இவ்வுடல்வேட்புநீங்கி னில்லறத்தாசைதன்னோ
டவ்வியமுதலாயுள்ள வகிலவாசனைகளெல்லாங்
க[illegible]வறுதொழியுமப்பாற் கதித்திடுமையாற்றீசன்
செவ்வியபரமாநந்தத் திருவருள்கிடைக்குநெஞ்சே. ௯

முட்டெலும்பிறைச்சிநாடி மூடுதோலுதிரந்தோய்ந்த
துட்டமாவடிவங்கொண்டு தோன்றிடுமடவார்மீதில்
இட்ட[illegible]வத்தலைந்தா லிணையற்றுமையாற்றீசன்
சிட்டர்களுன்னைச்சீசீ சீயெனவிகழ்வார்நெஞ்சே. ௰

புவனமுமுடலுமுண்மைப் பொருளெனநம்பிநின்றால்
அவமலாற்பயனென்றேனு மடைகுறுதயலொன்றின்மேற்
கவனமற்றினியெஞ்ஞான்றுங் காட்சிசேரையாற்றனைச்
சிவநமசிவாயவென்றே சிந்தனைசெய்வாய்நெஞ்சே. ௧௧

தப்பறுவசனஞ்சிவ தயையிவையிரண்டுநீங்கா
தெப்பொழுதினும்பொருந்தி யிருந்திடினுலகமெல்லாஞ்
செப்புமாமாயையென்னத் தேர்ந்திடுமதியுண்டாகும்
அப்பொழுதையாற்றீச னாட்கொளவரும்பார்நெஞ்சே. ௧௨

ஒப்பருமடியார்க்குள்ள முவந்தொன்றுமீந்தாயில்லை
துப்புறுவி[illegible]கித் தொழில்களைப்புரிந்தாயில்லை
மைப்படுவிழியார்தங்க[illegible] மையலைவிடுத்தாயில்லை
[illegible]பொழுதையாற்றீச னின்புனக்குதவுநெஞ்சே. ௧௩

இக்கணம்போமோவன்றி யினிவருங்கணத்திற்போமோ
மொக்குள்போற்றோன்றிமாயு முடைகெழுமுடலென்றோர்ந்
திக்கிருநான்கும்போற்றுந் திருவையாற்றீசன்பாதஞ் [து
சிக்கெனவடையுமார்க்கந் தேடுவாய்திரமாய்நெஞ்சே. ௧௪

எண்டருந்தோற்றமேழி லிதம்பெறுமனுடமெய்யை
மண்டனிலெடுத்துமுண்மை வழிசெலாதசத்திலிச்சை
கொண்டயர்ந்துழன்றுலோரொண் குணந்திகழையாற்றீசன்
தொண்டர்கள்கண்டாற்றூதூ தூவெனவுமிழ்வார்நெஞ்சே

குருவடிவாகக்கோலங் கொண்டுமுன்னாட்கல்லாலின்
தருவடிதனிலிருந்து சனகராதியர்நால்வர்க்கும்
ஒருவடிவாகுமுண்மை யுரைத்தருளையாற்றீசன்
திருவடிப்புகழ்ச்சிமாலை தினஞ்செயவிரும்புநெஞ்சே. ௧௬

திருவளரையாற்றீசன் சேவடிப்பணிசெய்துய்யா
தருமைசேர்வாழ்நாளெல்லா மவத்திலேகழித்தானுளை
வெருவுசெய்தியமன்வந்து விரைவினிலழைக்குமப்போ
தொருமொழிமறுத்தன்னோனுக் குரைத்திடற்குளதோ நெஞ்சே.

தூக்கினலறிஞர்போற்றுந் தூயனையையாற்றீசன்
நோக்கினலன்றிவேத நூலினைக்கிளிபோல்ஞானந்
தாக்கினோரெப்பவிங்ஙன் சகத்துளோரறியும்வண்ணம்
வாக்கினுலுரைத்தாலின்பம் வாய்க்குமோவஞ்சநெஞ்சே. ௧௮

அரகரசிவசம்போசங் கரவெனவையாற்றானை
இரவினும்பகலும்போற்றி யெய்தினரடியாரின்பம்
ஒருபொழுதன்னோன்றாட்கிவ் வுலகவாசனைவிட்டன்பு
விரவிடாதின்பமட்டும் வேண்டினல்வருமோநெஞ்சே.

ஆற்றல்சாலையாற்றீச னருளிலாமாந்தரென்னுந்
தேற்றமில்விட்டில்வீழுந் தீபநேர்மடவார்தம்மைக்
கூற்றுவனெனக்காணின்றேற் குலவுடையணிதோனீத்துச்
சாற்றுருவதைப்பாரின்றேற்றுயெனக்காண்பாய்நெஞ்சே. ௨௰

நாமரூபத்தைநீக்கி நாடொறுமையாற்றீசன்
சேமநல்லருளையன்பாய்ச் சிந்தைசெய்திருப்பாயாகிற்
[illegible]ாமனற்படும்பஞ்சென்னப் புரியும்வல்வினைகளெல்லாம்
ஆமுனக்கொருகாலத்து மழிவிலாவின்பநெஞ்சே. ௨௧

ஆரணமுடியிலென்று மமர்ந்தொளிரையாற்றீசன்
பூரணவருளுண்டானாற் பொருந்திருவினைகளேது
தாரணியோர்களோதுஞ் சமயவாதனைகளேது
மாரணஞ்சனனமேது மாயையேதுனக்குநெஞ்சே. ௨௨

கண்டிகைதிருநீறிட்டுக் கருத்திலைந்தெழுத்தையுன்னித்
தெண்டனிட்டையாற்றீசன் சேவடிதனிலெஞ்ஞான்றுந்
தண்டமிழலங்கல்சூட்டிச் சலிப்பறவிருப்பாயாகிற்
சண்டனுமணுகானின்பஞ் சமத்தமுமுனக்காநெஞ்சே. ௨௩

பாவபுண்ணியத்தையாய்ந்து பதைப்பிருவகையுமோய்ந்து
யாவர்நிந்தித்தாரேனும் யாவர்வந்தித்தாரேனும்
யாவையுமையாற்றீச னெழில்விளையாட்டென்றுன்னின்
மேவருஞ்சிவன்முத்தி மெய்ப்பதம்பெறலாநெஞ்சே. ௨௪

கொடுப்பதற்கேதிரக்கங் குலவுகாமாதிதம்மைத்
தடுப்பதற்[illegible]ஞானந் தகவிலாக்[illegible]யோர்நட்பை
விடுப்பதற்கேதுமெய்ந்நூல் விசாரமையாற்றீசன்றாள்
[illegible]ப்பதற்கேதுதொண்ட ரடித்தொண்டுபுரிதனெஞ்சே. ௨௫

உண்ணலுமுடுத்தலுக்கு முறங்கிடுவதற்குமாறு
தெண்ணமுற்றிடல்போலையாற் றீசனுக்கமலபூசை
பண்ணுதற்கினியெப்போழ்தும் பரிவுகொண்டிருப்பையாகிற்
கண்ணனுமறியாப்பாதங் காணலாமெளிதினெஞ்சே. ௨௬

தாழ்ந்துநற்றலையுநாணித் தளையிடைச்சவமாயங்கம்
வீழ்ந்திருகரமுங்காலும் வெண்டுகிலிழையாற்கட்டுண்
டாழ்ந்திடவிழியுஞ்சார்ந்தோ ரணைவருங்கூவிக்கூவிச்
சூழ்ந்தழுமுனமையாற்றுச் சோதியைப்பணிவாய்நெஞ்சே. ௨௭

கண்ணொளிமழுங்கிப்பற்கள் கழன்றுநாக்குளறிக்கையில்
நண்ணுகோலூன்றிக்காய நடுக்குநாள்வாராமுன்னர்
எண்ணொளிகளுக்குஞ்சான்றா யிலங்குசீரையாற்றீசன்
திண்ணியவடியார்தம்பாற் சேர்ந்துமெய்யுணர்திநெஞ்சே. ௨௮

நேற்றின்றுநாளையென்று நிசியென்றும்பகலென்றுஞ்சொன்
மாற்றியோர்மதியாண்டாக வாழுநாள்கழியக்கண்டும்
ஊற்றமாமையாற்றீச னுயர்பதநினையாயாகில்
ஆற்றொணாவிருவினைக்கா ளாகுவாயுரைத்தேனெஞ்சே. ௨௯

மன்னுமாமலரிற்கந்த மணியிடத்தொளிபோலென்றும்
உன்னிடத்தையாற்றீச னொளிர்வதையுணர்ந்திடாமல்
அன்னியவடிவாய்ப்பாவித் தகிலமீதலைந்துநின்றால்
துன்னியபிறப்பிறப்பே துணையுனக்காகுநெஞ்சே. ௩௰

மொழிந்திடுங்காலமாதி மூவகைப்பரிச்சேதங்கள்
ஒழிந்திடத்தொழியாதோங்கு முண்மையாமையாற்றீசன்
செழுந்திருவருளைநாடிச் சித்திரதீபம்போலுள்
அழுந்திநீநிற்றலன்றோற் காற்றுமெய்ப்பூசைநெஞ்சே.

சாற்றுமூன்றுடல்விகாரந் தணந்துயரறிவாய்நின்று
தோற்றுமோர்பொருட்கணேனுந் துவிதபாவனைபொருந்தா
தாற்றலாளையாற்றீச னருள்வடிவெனக்கண்டாங்குத்
தேற்றமாயிருத்தலன்றோன் றெரிசனமாகுநெஞ்சே. ௩௨

எதிருறநேற்றுளாரை யின்றிலராகக்கண்டும்
அதிகநாளிருப்போமென்றிங் களவறுநினைவைக்கொண்டே
[illegible]யுறுமையாற்றீசன் சேவடிமறந்துநின்றாற்
[illegible]திசெயுமிலவுகாத்த தத்தைபோலாவாய்நெஞ்சே. ௫௩

தினந்தினமையாற்றீசன் றிருவடிக்கமலப்போதை
நினைந்துநெக்குருகிவாழ்த்தி நின்றிலையன்றேனன்பர்
இனந்தெரிந்திரங்கித்தேடி யிணங்கிலைமெய்வாக்கில்லை
சினந்தவிர்த்திருந்தாயில்லை சித்தியென்றடைவாய்நெஞ்சே. ௫௪

பாகுநேர்மொழியார்தங்கள் பக்குவகாலந்தன்னில்
தாகநாயகனைத்தேடுந் தன்மைபோலுயர்வாமிந்தத்
தேகநாமடைந்ததற்குச் சிறந்திடும்பலனுமையாற்
றேகநாயகனைத்தேடி யிருமையற்றிருப்பாய்நெஞ்சே. ௫௫

கானலிற்புனலுமோதுங் கயிற்றினிலரவுமாதி
ஆனவெண்டேராநாணை யன்றிவேறின்மைபோலத்
தானமாமண்டபிண்ட சராசரமனைத்துநோக்கின்
மானமாமையாற்றீசன் வடிவலாதிலையாநெஞ்சே. ௫௬

சரிமுதலுறவியீருக் கண்டிடுமுயிரனைத்தும்
அரியதன்னுயிர்போலெண்ணி யன்புவைத்திருப்பாயாகிற்
பரிவுடனுலகமூன்று[illegible]யுறுமையாற்றீசற்
[illegible]ரியதொண்டாவாயீதை யுண்மையென்றுணர்திநெஞ்சே. ௫௭

காண்டகுநாமரூப காட்சிசேரகிலத்தின்கண்
வேண்டுவதனைத்துந்துன்பாம் விடுத்தவையனைத்துமின்பாம்
பூண்டவித்தனுவிருக்கும் போழ்தினிலையாற்றீசன்
மாண்டருவடிவையுன்னி மறதியற்றிருப்பாய்நெஞ்சே. ௫௮

மருக்கமழ்செழும்பூஞ்சோலை வயங்குமையாற்றீசன்றாள்
உருக்கமுற்றுன்னியுன்னி யுருகிடாதனந்தநூலுந்
திருக்கறவுணர்ந்தோனென்று செகத்துளோர்மதிக்குமாறு
தருக்கமிட்டலைந்தாலின்பஞ் சாருமோசிறிதுநெஞ்சே. ௩௯

வெல்லவேண்டுவனவேட்கை வெகுளிமாமயக்கமூன்றும்
புல்லவேண்டுவதெஞ்ஞான்றும் பொய்மொழியுரையார்நட்பு
செல்லவேண்டுவதுஞான தேசிகனருளுமார்க்கஞ்
சொல்லவேண்டுவதையாறன் றூயவைந்தெழுத்தாநெஞ்சே. ௪௰

தத்துவம்பரம்வியோமஞ் சாச்சுவதமகளங்கம்
முத்தமோங்காரந்துல்யம் மோனநிர்க்குணம்ப்ரதானம்
புத்தமத்துவிதம்பூர்வம் புரணமென்றையாற்றீசன்
அத்திருவருளையன்போ டநுதினநினைவாய்நெஞ்சே. ௪௧

உன்னதமகண்டாகார முண்மையப்பிரமேயஞ்சை
தன்னியஞ்சிவநிர்வாணஞ் சத்தனுமயந்திருக்கு
நன்னயம்விச்வாதீதம் ஞானநிர்வாச்யமென்றே
இன்னவாறையாற்றீச னியல்பறிந்திருப்பாய்நெஞ்சே. ௪௨

நிறையுளானருமையுள்ளா னிரந்தரமடியாருள்ளத்
துறையுளான்கருணையுள்ளா னுயர்வுளானெச்சீவர்க்கும்
இறையுளானினிமையுள்ளா னிகலு[illegible]மறைநான்முற்றும்
அறையுளானையாற்றீச னமெனவறிவாய்நெஞ்சே. ௪௩

செயலிலானுவமையில்லான் றிரிவிலான்பிரிவுமில்லான்
மயலிலான்பெயருமில்லான் வடிவிலான்முடிவுமில்லான்
இயலிலானினமொன்றில்லா னிரவிலான்பகலுமில்லான்
அயலிலானையாற்றீச னமெனநினைவாய்நெஞ்சே. ௪௪

பெரியன்மாலயனுங்காணான் பின்னமிலடியார்தங்கட்
குரியனெப்போதுமேக னுன்னருமத்திபாதிப்
பிரியன்யானெனதுநீங்காப் பேதநெஞ்சுடையார்காண்டற்
கரியனல்லையாற்றீச னுமெனநினைவாய்நெஞ்சே. சரு

அருவமாயுருவமாகி யாதியாயனாதியாகிப்
பொருவருசாட்சியாகிப் புனிதமாயசலமாகிச்
சருவசத்தார்த்தமாகிச் சாந்தமாமையாற்றீசன்
திருவருளதனைநாடித் தீவினையொழிவாய்நெஞ்சே. சசா

ஆசையோர்மூன்றிற்பற்றா தைம்பொறிகளையுமீட்டுக்
காசுறுசிவபோதக் கரணவாசனைகளென்னுந்
தூசுநீத்தசைவில்லாமற் சுழிமுனைநடுவினின்றால்
தேசுசேரையாற்றீசன் றிருநடந்தோன்றுநெஞ்சே. சஎ

தட்டிலாத்தனதனைப்போற் றனம்படைத்தாலுந்தொன்று
தொட்டுநூற்பலகற்றாலுந் தொடருமேழ்பவங்களென்னுந்
துட்டமாங்கடலைநீந்தத் துறவறமடையாமாந்தர்க்
கெட்டுமோவையாற்றீச னிணையடிப்புணைதாநெஞ்சே. சஅ

ஞானமந்திரமியோகந் தவம்பலவியற்றினாலுங்
கானகந்திரிந்திட்டாலுங் கலையெலாமுணர்ந்திட்டாலும்
ஊனுடல்வளர்ப்பான்.....ஞனிவிரும்பியுண்ணும்
மா.....ர்க்கையாற்றீசன் மகிழ்ந்தருள்செயுமோநெஞ்சே. சகூ

தீரவேண்டுவதுவஞ்சஞ் செய்யவேண்டுவதுநன்மை
ஓரவேண்டுவதுமுன்னா லொடுக்கவேண்டுவதைவாயுங்
கோரவேண்டுவதுஞானங் கொள்ளவேண்டுவதுசாந்தஞ்
சேரவேண்டுவதையாறன் றிருவடியெனக்காநெஞ்சே. ருப

வெண்ணெய்தங்கரத்திருக்க விரும்பிநெய்க்கலைவார்போல
நண்ணியிங்கையாற்றீச னமதகத்திருக்குந்தன்மை
எண்ணிடாதங்கிங்கென்றே யித்தரையகத்தினீயுங்
கண்ணிலார்போனின்றேவீண் காலமேன்கழித்தாய் நெஞ்சே.

மலமென்றுமாயையென்று மதியென்றும்விதியதென்றும்
நலமென்றுந்தீமையென்றும் நாளென்றுங்கோள்களென்றுங்
குலமென்றுஞ்சாதியென்றுங் குறியென்றுங்குணங்களென்றுந்
தலமென்றுமையாற்றீசன் றாசர்கட்குளதோநெஞ்சே. ௫௨

சுசியென்றுமசுசியென்றுஞ் சூதென்றும்வாதமென்றும்
பசியென்றுமுறக்கமென்றும் பதியென்றுமடவியென்றும்
நிசியென்றும்பகலதென்றும் நீண்டசெஞ்சடிலத்தென்றுஞ்
சசியொன்றுமையாற்றீசன் சரணருக்குளதோநெஞ்சே. ௫௩

தரித்திடுவாதமித்தை தன்மயமெனுமுக்கண்ணுற்
கருத்துறுஞ்சிவபோதக் கருளறநோக்கிச்சான்றாம்
எருத்திலூர்ந்துண்மைஞான வின்பமேவடிவாய்நிற்பார்
திருத்தகுமையாற்றீசன் சேவடித்தொழும்பர்நெஞ்சே. ௫௪

கணக்குறுதூலசூக்க காரணதனுக்களென்னும்
பிணக்குறுபுரங்கண்மூன்றும் பெயர்த்தறிவாகியென்றுங்
குணக்குறியொன்றிலாநிர்க் குண[illegible]க்கிளை[illegible]பொருந்திநிற்பார்
மணக்குநல்லையாற்றீசன் மலரடிக்கடியார்நெஞ்சே. ௫௫

காமனைவிவேகமெய்க்கண் காட்சியாற்றகித்துத்திண்டோள்
எமனையபவாதத்தா லிகல்கொடுசெகுத்துமேலாம்
மாமனையரங்கிற்போத மாதுடன்சுகிப்பார்கொன்றைத்
தாமனையாற்றீசன்றாட் சரண்புகுந்தவத்தோர்நெஞ்சே. ௫௬

தற்புகழினையுமற்றோர் தவறையுமெடுத்தியம்பார்
நற்புசிப்புணவிரும்பார் நாட்டுளோர்க்குண்மைகாட்டார்
கற்பனைநெறியிற்செல்லார் காலமூன் றினையுங்கொள்ளார்
அற்புதனையாற்றீசற் கன்புறுமடியார்நெஞ்சே. ௫௭

நஞ்சுவாரரவிற்கஞ்சார் நமன்பிணியனற்குமஞ்சார்
விஞ்சுவாரிதிக்குமஞ்சார் வேங்கையாதிகட்குமஞ்சார்
மஞ்சுவார்குழலார்க்காளாய் மதியிழந்தவரைக்கண்டால்
அஞ்சுவாரையாற்றீச னடியரென் றறிதிநெஞ்சே. ௫௮

அறிவுருவாகுமையாற் றண்ணலுக்கடியாரென்னத்
துறவறவேடம்பூண்டு சூழ்கடற்புவியோர்காணப்
புறநடைகாட்டியுள்ளிற் பொருந்துபேராசையுள்ளோர்
திறனுறுமுத்தியின்பஞ் சேர்வதெவ்வழியோநெஞ்சே. ௫௯

இருவகைப்பற்றுநீத்தோ ரெனநடைகாட்டியுள்ளில்
மருவுபேராசைவஞ்சம் வைத்துநீமறைத்துநின்றாற்
சருவசீவாதிக்குள்ளுஞ் சார்ந்துசித்துருவாய்நிற்கும்
ஒருவனையாற்றீச னுணர்ந்திடாதுளதோநெஞ்சே. ௬௰

நின்னிடத்துண்மைசாந்தம் நிராசையோர்சிறிதுமின்றி
அன்னியர்தமைப்பார்த்தின்னோ ரறிவிலாரெனநீயெண்ணல்
உன்னிருங்குறையேயல்லா லோர்ந்துணர்ந்தையாற்றீசன்
நன்னிலைதெளிந்தோர்மற்றோர்நவையெடுத்துரையார்நெஞ்சே

ஊனமாம்பொறிபிராணை னுடல்கரணங்கணீத்து
ஞானமாம்வடிவம்பூண்ட நல்லவரிதையமாறு
மோனமாமையாற்றீசன் முதுமறைமுடியைக்கண்டால்
தானமாசாரநோன்பேன் றவங்களேன்செபமேனெஞ்சே. ௬௨

நரியெரிகழுகுநாய்க ணன்றுநன் றெனவேயுண்ணும்
இரையுடம்புளதென் றெண்ணி யிகத்தினுட்கழித்திடாமல்
தரைபுகழையாற்றீசன் சந்நிதிக்கண்போடேகி
நிரைதருந்துவாதசாந்த நிலையடைந்துய்வாய்நெஞ்சே. ௬௩

சட்டநால்வேதமாறு சாத்திரமுழுதுணர்ந்தும்
அட்டமாசித்திபெற்று மருந்துறவறமடைந்தும்
சிட்டர்சூழையாற்றீசன் சிதம்பரவடிவந்தன்னைச்
சுட்டறவுணர்ந்தாலன் றித் தொல்வினைபோமோநெஞ்சே. ௬௪

உள்ளதுபோகாதில்லா துற்றிடாதெனவுணர்ந்திங்
கெள்ளளவொன்றையேனு மிச்சியாதிருப்பாயாகில்
தெள்ளுசீரையாற்றீசன் றிருவுளமகிழ்ந்துனக்கு
வள்ளலாய்ஞானானந்த வாழ்வளித்தருளுநெஞ்சே. ௬௫

சங்கடம்பெரும்புண்கும்பி சடமசத்தசுகமாயை
பொங்கறற்குமிழிவெண்டேர்ப்புனன்முயல்மருப்பென் றிவ்வா
றங்கமோடுலகைப்பல்கா லனந்தமாய்நிந்திப்பாயேல்
துங்கமாமையாற்றீசன் க்ஷேத்திரமதுவாநெஞ்சே. ௬௬

கற்றுணர்வில்லாரோடு கரமெனத்திரியுநெஞ்சே
பற்றறத்துறந்தோர்தம்பாற் பழகிடாப்பாவிநெஞ்சே
பொற்றொடிமடவார்மோகம் பொருந்தியபுரைசேர்நெஞ்சே
சற்றுநின்றையாற்றீசன் சரணினைந்துருகாய்நெஞ்சே. ௬௭

சுயவறிவில்லாநெஞ்சே சொன்மொழிகேளாநெஞ்சே
நயமிடரறியாநெஞ்சே நாணமற்றலையுநெஞ்சே
செயலுறும்பொருண்மேன்மேலுந் தேடவேவிரும்புநெஞ்சே
இயலுறுமையாற்றானை யெப்பொழுதடைவாய்நெஞ்சே. ௬௮

கரணமாய்ப்பொறியாய்வானாய்க் காற்றனலறலாய்மண்ணாய்த்
திரணமாய்மகத்தாயண்மை சேய்மையற்றழிவற்றெங்கும்
பூரணமாயையாற்றீசன் புரையறநிறைந்திருக்கத்
தாரணியிலயலாக்காணிற் சனனமென்றொழியுநெஞ்சே. ௬௯

பொன்னுடன்மனையெஞ்ஞான்றும் போதவேதேடநாடி
உன்னுடன்மருவுற்றோரு ளுய்ந்தவரொருவர்காணேன்
மின்னுடல்மறையாமுன்னர் வேறொருவிடத்துஞ்செல்லா
தென்னுடன்வந்தாலையாற் றீசனாய்வருளுநெஞ்சே. ௭௰

நல்லெழிலிலங்கையாற்று நாதனைமறந்துசெய்த
அல்லலாம்வினையெலாஞ்சேர்ந் தங்கமாயுருக்கொண்டிந்தத்
தொல்லையாஞ்சகத்திற்றோன்றுந் தோகைமார்தமைநீத்தில்
எல்லையில்பெண்பாற்சென்ம மெடுப்பதேபலனாநெஞ்சே. ௭௧

விடையவின்பதனைநாளும் விரும்புவோருலகிற்றுன்பம்
அடைவதைப்பிரத்தியக்க மாகநீமறிந்துமின்னுந்
தடையறவிருமைப்பற்றுந் தவிர்ந்திடாதிருந்தாயானால்
விடையுயனையாற்றீசன் மெய்யருள்வருமோநெஞ்சே. ௭௨

தந்தைதாய்சுற்றமாயென் சற்குருமூர்த்தியாகி
உந்துமென்னன்பாயன்பி னுணர்வுமாயுணர்வினின்பாய்ச்
சந்ததநிகழையாற்றுத் தாணுவைமறந்தாலந்தோ
எந்தவாறுயர்வீட்டின்ப மெய்துவாயேழைநெஞ்சே. ௭௩

புவியரசாளுமன்னர் பொருந்துமோர்சுகத்தைநோக்கிற்
கவியுநோய்பகைஞரங்கி கள்ளராதியராற்றுன்பாம்
அவிரொளியையாற்றீச னருளினாலுண்மைஞானந்
துவிதமற்றடைந்தாலந்தச் சுகங்குறைவுறுமோநெஞ்சே. ௭௪

பொன்னிசூழையாற்றீசன் பூங்கழற்குகந்துமுன்னாள்
மன்னியவன்பினோடு வழிபடாப்பிழையாலிப்போ
தின்னலுக்காளானாயின் றேனுநீநினையாயாகில்
இன்னுமேதேதுதுன்ப மெய்துமோவறியேனெஞ்சே ௭௫

அருமைசேரையாற்றீச னம்புயபதத்தைச்சார்தற்
குரியநற்றவமேதென்னி லுலைவிலாநிதிவந்தாலும்
வருசுடரவனுமிந்தும் வடக்கொடுதெற்கானாலும்
ஒருமொழியேனும்பொய்யா துறுதலென்றறிதிநெஞ்சே. ௭௬

அமலமேயருளேமுக்க ணையனேயரசேயென்றன்
முமலமோர்மொழியானீக்கு முதல்வனேமுடிவிலானே
கமலநேத்திரனுங்காணாக் கடவுளேயெனவெஞ்ஞான்றும்
விமலமாமையாற்றானை விருப்புடனினைப்பாய்நெஞ்சே. ௭௭

வியப்புறும்பெரியோர்போல வேடமிட்டுலகத்தோரை
மயக்கியூனுடல்வளர்த்தே வருவதிற்பலனுண்டாமோ
தயக்கறுமையாற்றீசன் சாட்சியாச்சன்மார்க்கத்தின்
முயற்சியுற்றிருப்பதேநன் முத்தருக்கியல்பாநெஞ்சே. ௭௮

கருத்தினைப்புறத்தேவிட்டுக் காயமேயகமென்றெண்ணும்
விருத்தியுற்றறிஞர்போல வேடமிட்டிருக்கிலென்னாம்
அருத்தனாமையாற்றீச னருளினையிரண்டற்றுன்னித்
திருத்தமாஞ்சகசநிட்டை சேர்ந்திருந்திடுதிநெஞ்சே. ௭௯

அறையிடத்தாடியப்பா லம்பலத்தாடென்றிங்ஙன்
முறையிடுமுலகவாக்கை முதன்மையாத்தினங்கொண்டிந்த
இறைமலியுடலினையாற் றீசனின்றிடல்கண்டாயேல்
மறைவறவனைத்துமான வாய்மையுமறிவாய்நெஞ்சே. ௮௰

இற்றனந்தமர்தாய்தந்தை யிவைமுதலவற்றின்மேவும்
பற்றகன்றையாற்றீசன் பதந்தனையடைந்தார்மிக்கோர்
சற்றவைதமிலொன்றேனுந் தணந்திடாதிருத்தனின்மேற்
குற்றமேயன்றியென்மேற் குறையிலையறிதிநெஞ்சே. ௮௧

மண்ணயங்கனகந்தந்து மலிகடமாயுதம்பூண்
நண்ணுடையெனவெவ்வேறாய் நாமமாத்திரமானாற்போல்
கண்ணுதற்கருமையாற்றுக் கண்ணுதலொருவன்றானே
எண்ணுலகுயிராய்நாம மிசைந்திலங்குவன்காணெஞ்சே. ௮௨

சென்றநாடம்மைநாடிற் சேர்வதோர்பயனுமில்லை
ஒன்றெதிராண்டையுன்னி லுடலொருகணப்போதேனும்
நின்றுறாதாதலாலின் னிகழ்தருபொழுதிலேனும்
நன்றமைத்தையாற்றீச னகைமலரடிசேர்நெஞ்சே. ௮௩

மாடமாளிகையிருக்க மனைமகவருகிருக்கத்
தேடியபொருளிருக்கச் சேர்ந்தவர்சூழ்ந்திருக்கக்
கூடுவிட்டுயிரைக்காலன் கொண்டுபோகுதலைக்கண்டுஞ்
சேடுறுமையாற்றானைச் சிந்தியாதென்னேநெஞ்சே. ௮௪

கங்கிலாவாதபித்த கபமுதலியநோய்க்கில்லம்
அங்கமாநமக்கீதில்ல மன்றுநாமிதுவுமன்றே
இங்கிடமிதற்குத்தேட லென்கொலோவனைத்துயிர்க்குந்
தங்கிடமையாற்றீசன் சரணெனவறிவாய்நெஞ்சே. ௮௫

திரவியவிருப்பங்கொண்டாற் றேடும்போதுந்துன்பங்
கரவுசெய்ததனைப்பாது காத்திடலதினுந்துன்பந்
துரிதமாச்செலவுசெய்யிற் றுன்பமாமாதலானீ
விரவுறாதையாற்றீசன் மெய்ந்நிலையுணர்வாய்நெஞ்சே. ௮௬

ஈனமாமடவார்தம்பா லிச்சைவைத்திருந்தாயாகில்
மானமும்தியுங்குன்று மாதவநிலையாதங்கம்
ஊனமாம்புலைகோள்வஞ்ச மோங்குமெவ்வுலகுமேசும்
ஆனதாலதைநீத்தையாற் றண்ணலைத்தொழுவாய்நெஞ்சே.

புன்மொழியுடையார்நட்பைப் பூண்டனுதினமுமென்றன்
நன்மொழிவழிநில்லாது ஞமலிபோலுழல்கின்றாய்நீ
சன்மொழியையாற்றீசன் றாசர்முன்கொடுபோயன்னோர்
வன்மொழித்தடிகொண்டுன்னை மாட்டுவேன றிவாய்நெஞ்சே.

மந்திரஞ்சாலம்வாதம் வசியஞ்சோதிடஞ்சரத்தோ
டுந்துபண்டிதமுமற்று முள்ளனவனைத்துங்கற்றும்
அந்தமாமையாற்றீச னசிபதநிலையைக்கூடுந்
தந்திரமறியாமாக்கள் சமர்த்துமோர்சமர்த்தோநெஞ்சே. ௮௯

நாத்தியாங்காத்திரத்தை நானெனதெனுமகந்தை
கோத்திரங்குலங்கணீத்த கொள்கையோர்க்குறவாய்நிற்கும்
ஆத்திருடையாற்றீச னருளிலாரனந்தங்கோடி
சாத்திரம்படித்திட்டாலுந் தன்னிலையுணரார்நெஞ்சே. ௯௰

வாசமோதுவதைக்கண்டே மலரிவணுளதென்றாற்போல்
வீசிடும்புகைகண்டிங்கு வெங்கனலுளதென்றாற்போற்
பேசுறும்பிரியமோடப் பிரியமில்குணங்கண்டையாற்
றீசனுக்குகந்தநேச னெனச்சொலுமுலகுநெஞ்சே. ௯௧

தருணமீதுன்றாடஞ்சஞ் சங்கராவெனையாளென்றுள்
விரவுறுமார்க்கண்டர்க்காய் விரைவில்வந்தியமனங்கந்
தரையிடைவிழவுதைத்த தகைமைசேரையாற்றீசன்
கருணையங்கழலிருக்கக் கலக்கமேனுனக்குநெஞ்சே. ௯௨

நெஞ்சறிவுறுத்தல்.

மத்தகமின்றஞ்சவாக்கை மயிர்சிலிர்த்திடவிர
கைத்தலந்திருத்தொண்டாற்றக் கண்களிலுதகஞ்
சித்தமாமறைகளோதுஞ் சீர்த்தியைநாத்துதிக்க
நித்தமிம்முறையையாற்றி னிமலனைநினைவாய்நெஞ்சே.

காண்பதுகேட்பதொன்றைக் கருதுவதயர்ப்பதாடை
பூண்பதூண்புசிப்பதாற்றல் புரிகுவதிருப்பதான
சேண்படுமிவ்வனைத்துந் தீர்க்கசொற்பனமாக்காணின்
மாண்படுமையாற்றீசன் மகிழ்ந்தருகழைக்குநெஞ்சே. ௰௪

பொருவருமீசானந்தற் புருடமோடகோரம்வாமம்
இருளறுஞ்சத்யோசாத மிவற்றியலனைத்துமாக்கல்
மருவுறக்காத்தன்மாய்த்தன் மயக்குதல்விளக்குவித்தல்
அருண்மலியையாற்றீச னைம்முகத்தியல்பாநெஞ்சே. ௰௫

ஓங்குதன்வயத்தன்றூய வுருவினனியற்கைஞானன்
தாங்குமுற்றுணர்ந்தோன்பாசந் தங்கிடானருட்பேராளன்
வாங்குமீறில்லாவாற்றல் வரம்பிலின்புடையான்மங்கை
பாங்குறுமையாற்றீசன் பதம்பணிந்துய்வாய்நெஞ்சே. ௰௬

காயமூன்றினையும்வேறாக் காண்பொருள்பிரமமென்றும்
நேயமாமதுநானென்றும் நீயதுவானாயென்றும்
ஆயபௌதிகமிப்பூத மனைத்துமப்பிரமமென்றும்
ஏயநான்மொழிதேர்ந்தையாற் றீசனையுணர்வாய்நெஞ்சே.

பன்னுமாமறைநூலெல்லாம் பகர்ந்திடுமொழியின்முற்றும்
மன்னுமாதவத்தோரோதும் வாக்கியப்பொருளின்முற்றும்
உன்னருமையாற்றீச னுருவெனவுணர்ந்தபின்னர்
இன்னுநூல்விருப்பங்கொண்டிங் கேனுழல்கின்றாய்நெஞ்சே.

...ஞ்சறிவுறுத்தல்.

...கைதன்மை மும்மையுந்தானாயோங்கும்
...யாற்றீச னாமவைந்தெழுத்தைமாறா
...வகைப்பிராந்தி யொழிந்துயரமலாநந்தத்
...லையுணரநான்கு சாதனந்தழைக்குநெஞ்சே. ௯௯

...மைம்பொறியடக்கித் துய்யவாதனத்தின்மீதில்
...ன றிநின்றையாற்றீச னுருவினைப்பரிவினோடெஞ்
ஞான்றுநீமறந்துன்னாது நாடியேயுருகிநின்றால்
சான்றுசாக்கியங்களில்லாத் தனிநிலை பெறலாநெஞ்சே. ௱

வாழி.

அஞ்செழுத்திலங்கிவாழ்க வாரணநான்கும்வாழ்க
விஞ்சுமெய்யடியார்வாழ்க வெண்பொடிமணியும்வாழ்க
மஞ்சுலாமையாற்றீசன் மலர்ப்பதம்வாழ்கவிந்த
நெஞ்சறிவுறுத்தல்கற்றோர் நித்தமும்வாழ்கமன்னோ.

நெஞ்சறிவுறுத்தல் முற்றிற்று.

ஸ்ரீசற்குருபாதந்துணை.